# தி.மு.க. வழங்கிய திட்டங்களே 100% வெற்றிக்கு காரணம்: மு.க.ஸ்டாலின் பெருமிதம்

**சென்னை, ஜூன்.6– 40 நாடாளுமன்றத் தொகுதிகளையும் கைப்பற்றி 100 சதவீதம் வெற்றி பெறுவதற்கு தமிழகத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தி.மு.க. அரசு வழங்கிய திட்டங்களே காரணம் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் கொண்டுள்ளார்.**

இதுகுறித்து தி.மு.க. தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:

நடந்து முடிந்துள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றுள்ள வெற்றி தனித்தன்மையானது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இதற்கு முன் பெற்ற வெற்றிகளை எல்லாம்விட பெருமைக்குரிய மகத்தான வெற்றி இது. அவர் தி.மு.க.வின் தலைவராக பொறுப்பேற்ற 2018ம் ஆண்டிற்குப் பிறகு நடைபெற்ற 8 தேர்தல்களில் தொடர்ச்சியாக வெற்றியைத் தேடித்தந்துள்ளார்.

இந்த நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பதாகவே தேசிய அளவில் உள்ள எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைத்து இந்தியா என்ற கூட்டணியை உருவாக்கி தேசிய அளவில் அக்கூட்டணி மகத்தான வெற்றியை பெறுவதற்கு அடித்தளமாக விளங்கினார். கூட்டணிக் கட்சிகள் கட்டுப்கோப்பாக இணைந்து செயல்படுவதற்கும் ஊக்கம் தந்தார். தேர்தல் பணிகள் தொடங்குவதற்கு ஓராண்டுக்கு முன்னதாகவே, நாடாளுமன்றத் தொகுதி வாரியாக பாகங்களின் முகவர்கள் கூட்டத்தினை நடத்தினார்.

### இந்தியாவைக் காப்போம், உரிமைகளை மீட்போம்

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் ஒவ்வொரு முறையும் இந்தியாவைக் காப்போம், உரிமைகளை மீட்போம் என்ற அவரது குரல், பேசு பொருளாக மாறி இந்தியா கூட்டணியை வெற்றி பெறச் செய்தது. தமிழ்நாட்டில் உள்ள கூட்டணிக் கட்சிகளை எல்லாம் ஒருங்கிணைத்து மொத்தமுள்ள 40 தொகுதிகளில் 50 சதவீத தொகுதிகளை கூட்டணிக் கட்சிகளுக்கு மிகவும் பெருந்தன்மையுடன் பகிர்ந்தளித்தார். அவற்றுள்ளும் எளிதாக வெற்றிபெறக் கூடிய தொகுதிகளை கூட்டணிக் கட்சிகளுக்கு வழங்கினார். மிகவும் கடுமையாக முயன்றால்தான் வெற்றிபெற முடியும் என்றிருந்த தொகுதிகளில் தி.மு.க.வை போட்டியிடச் செய்தார்.

2004ம் ஆண்டிற்குப் பிறகு புதுச்சேரி உள்பட 40 தொகுதிகளிலும் போட்டியிட்டு 40 தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற்று புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது.

கூட்டணி கட்சியினருக்கு நாடாளுமன்றத் தேர்தலில் பெற வேண்டிய வெற்றியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் அறிக்கைகளை வெளியிட்டு ஆர்வத்தை வளர்த்தார். ஓய்வு சிறிதும் இல்லாமல் தேர்தல் சுற்றுப் பயணத்தைத் தொடங்கித் தொய்வின்றித் தொடர்ந்தார். தி.மு.க. தலைவராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு நடைபெற்ற 2019ம் ஆண்டு நாடாளுமன்ற பொதுத்தேர்தல், 21 சட்டமன்ற இடைத்தேர்தல்கள், ஊரக உள்ளாட்சி தேர்தல்கள், 2021ம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தேர்தல், 2022ம் ஆண்டு நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்கள், ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல், நடந்து முடிந்த நாடாளுமன்றத் பொதுத் தேர்தல் உள்பட 8 தேர்தல்களில் தொடர்ச்சியாக மாபெரும் வெற்றிகளை ஈட்டிய தலைவர் மு.க.ஸ்டாலின்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் தி.மு.க. அரசு நிறைவேற்றிய கட்டணமில்லா விடியல் பஸ் பயணத் திட்டம், 1.15 கோடி இல்லத்தரசிகளுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் திட்டம், கல்லூரி மாணவிகள், மாணவர்களுக்கும் மாதம் 1,000 ரூபாய் வழங்கும் திட்டம், காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட பல சிறப்பான திட்டங்களை மக்களிடம் துல்லியமாக எடுத்துரைத்தார்.

### நாற்பதும் நமதே

10 ஆண்டு காலம் இந்தியாவை ஆட்சி செய்த பா.ஜ.க. கட்சி, மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை உள்பட கொடுத்த வாக்குறுதி எதையும் நிறைவேற்றாமல் வாய்ஜாலம் காட்டிய பொய்முகத்தை தமிழ்நாடு முழுவதும் மக்கள் அடையாளம் காணச் செய்தார். தி.மு.க.வின் முக்கியக் கொள்கைகளில் ஒன்றான சொன்னதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம் என்பதன்படி, அவர் செய்த திட்டங்களை எல்லாம் பட்டியலிட்டுக் காட்டினார். அவர் செயல்படுத்திய சாதனைகளை எல்லாம் மக்கள் மனதில் பதியும்படிக் கூறினார். பா.ஜ.க. ஆட்சியின் முறையற்ற செயல்களை மக்களுக்கு எடுத்துரைத்து மக்களின் ஆதரவைத் திரட்டினார். ஒவ்வொரு நாளும் வேட்பாளர்களையும் தொண்டர்களையும், தொடர்பு கொண்டு தொகுதி நிலவரங்களைக் கேட்டறிந்தார்.

இத்தகைய பணிகளின் வாயிலாக தேர்தலில் நாற்பதும் நமதே என்று கூறிய முழக்கம் மெய்பட்டு நாற்பதிலும் நூற்றுக்கு வெற்றி கிடைத்தது. இது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் படைத்துள்ள சரித்திரச் சாதனையாகும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மத்தியில் பா.ஜ.க. ஆட்சி செய்யக்கூடாது என்ற மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற 'இந்தியா' கூட்டணி உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கும்

## பிற கட்சிகளுக்கு மல்லிகார்ஜுன கார்கே அழைப்பு

**புதுடெல்லி, ஜூன்.6 தேர்தல் முடிவுகள் குறித்து டெல்லியில் 'இந்தியா' கூட்டணி ஆலோசனை நடத்தியது. கூட்டணியில் சேருமாறு பிற கட்சிகளுக்கு மல்லிகார்ஜுன கார்கே அழைப்பு விடுத்துள்ளார்.**

நாடாளுமன்ற தேர்தலில் எந்த கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் மீண்டும் ஆட்சி அமைப்பதற்கான பணிகளில் பா.ஜ.க. ஈடுபட்டுள்ளது.

எதிர்க்கட்சிகள் அடங்கிய 'இந்தியா' கூட்டணிக்கு 234 தொகுதிகள் கிடைத்துள்ளன. குறைந்தபட்ச பெரும்பான்மைக்கு தேவையான 272 தொகுதிகளுக்கு இன்னும் 38 எம்.பி.க்கள் ஆதரவு தேவை.

எனவே, தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள தெலுங்கு தேசம், ஐக்கிய ஜனதாதளம் ஆகிய கட்சிகளை இழுக்க 'இந்தியா' கூட்டணி முயற்சிப்பதாக கூறப்பட்டது.

இந்நிலையில், தேர்தல் முடிவுகளுக்கு பிறகு முதல்முறையாக நேற்று 'இந்தியா' கூட்டணி ஆலோசனை கூட்டம் நடந்தது. காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே இல்லத்தில் கூட்டம் நடந்தது.

சோனியாகாந்தி, ராகுல்காந்தி, பிரியங்கா (மூவரும் காங்கிரஸ்), தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், டி.ஆர்.பாலு (தி.மு.க.), அகிலேஷ் யாதவ், ராம் கோபால் யாதவ் (சமாஜ்வாடி), ஜார்கண்ட் முதல்மந்திரி சம்பாய்

சோரன், கல்பனா சோரன் (ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா), சரத்பவார், சுப்ரியா சுலே (தேசியவாத காங்கிரஸ்),

சஞ்சய் ராவத், அரவிந்த் சவந்த் (சிவசேனா உத்தவ் பிரிவு), அபிஷேக் பானர்ஜி (திரிணாமுல் காங்கிரஸ்), சீதாராம் யெச்சூரி (மார்க்சிஸ்ட்), டி.ராஜா (இந்திய கம்யூனிஸ்டு கட்சி), என்.கே.பிரேம சந்திரன் (புரட்சிகர சோஷலிஸ்டு கட்சி), சஞ்சய்சிங், ராகவ் சதா (ஆம் ஆத்மி), உமர் அப்துல்லா (தேசிய மாநாட்டு கட்சி) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், தேர்தல் முடிவுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டன. ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்புகள் பற்றியும் பரிசீலிக்கப்பட்டது. தெலுங்கு தேசம், ஐக்கிய ஜனதாதளம் ஆகிய கட்சிகளை இழுப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

கூட்டணியின் எதிர்கால செயல்திட்டம் பற்றியும் தலைவர்கள் ஆலோசனை நடத்தினர்.

கூட்டத்தில், பிற கட்சிகளுக்கு மல்லிகார்ஜுன கார்கே அழைப்பு விடுத்தார். அவர் பேசியதாவது:– 'இந்தியா' கூட்டணி கட்சிகள் ஒற்றுமையாகவும், உறுதியாகவும் போட்டியிட்டன. அக்கட்சிகளுக்கு நன்றி.

இந்தியா கூட்டணியின் பிரதான குறிக்கோளே மோடியையும், அவருடைய அரசியல் பாணியையும் எதிர்ப்பது தான். இந்த தீர்ப்பு மோடிக்கு எதிரானது. அவரது அரசியல் பாணிக்கு எதிரானது. அவருக்கு தனிப்பட்ட முறையில் மாபெரும் இழப்பு. தார்மீக தோல்வி. இருப்பினும் அவர் மக்கள் விருப்பத்தை சீர்குலைப்பதில் உறுதியாக இருக்கிறார்.

நமது அரசியல் சட்ட முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ள மாண்புகளிலும், பொருளாதார நீதி, சமூக நீதி, அரசியல் நீதி ஆகியவை தொடர்பான உட்பிரிவுகளிலும் அடிப்படை உறுதிப்பாடு கொண்ட அரசியல் கட்சிகள் 'இந்தியா' கூட்டணியில் சேரலாம்.

மத்தியில் பா.ஜ.க. ஆட்சி செய்யக்கூடாது என்ற மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற உரிய நேரத்தில் தேவையான நடவடிக்கையை இந்தியா கூட்டணி மேற்கொள்ளும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# மத்திய அரசில் முக்கிய பங்கு வகித்து தென் மாநிலங்களின் உரிமைகளை சந்திரபாபு நாயுடு பாதுகாப்பார்: ஸ்டாலின் நம்பிக்கை

**புதுடெல்லி, ஜூன்.6– டெல்லியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும், தெலுங்குதேசம் கட்சி தலைவர் சந்திரபாபு நாயுடுவும் திடீரென சந்தித்து பேசியது அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

இந்தியா கூட்டணி கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து நேற்று பகல் 1 மணி அளவில் டெல்லி சென்றார்.

விமான நிலையத்தில் அவரை தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு, திருச்சி சிவா எம்.பி., டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் மற்றும் தி.மு.க. எம்.பி.க்கள் பூங்கொத்து கொடுத்தும், சால்வை அணிவித்தும் உற்சாகமாக வரவேற்றனர்.

இதனைத்தொடர்ந்து அவர் தமிழ்நாடு அரசு இல்லத்துக்கு சென்றார். அங்கு போலீஸ் மரியாதை அளிக்கப்பட்டது. அதன் பின்னர் இந்தியா கூட்டணி கூட்டத்தில் பங்கேற்றார்.

கூட்டம் முடிந்ததும், சென்னை திரும்ப டெல்லி விமான நிலையத்துக்கு இரவு 8 மணிக்கு முதலமைச்சர் வந்தார். அப்போது, தெலுங்குதேசம் கட்சி தலைவர்

சந்திரபாபு நாயுடுவும் தேசிய ஜனநாயக கூட்டணி ஆலோசனையில் பங்கேற்றுவிட்டு ஆந்திரா மாநிலம் திரும்ப விமான நிலையம் வந்திருந்தார்.

அப்போது இருவரும் நேரில் சந்தித்துக்கொண்டனர். அந்த தருணத்தில் சந்திரபாபு நாயுடுவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பூங்கொத்து கொடுத்து, தேர்தல் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்தார். அதைப்போல மு.க.ஸ்டாலினையும் சந்திரபாபு நாயுடு வாழ்த்தினார்.

மத்திய அரசில் முக்கிய பங்கு வகித்து தென் மாநிலங்களின் உரிமைகளை அவர் பாதுகாப்பார் என்ற நம்பிக்கை உள்ளது என்று இந்த சந்திப்பு குறித்து ஸ்டாலின் குறிப்பிட்டார்.

# மக்களின் தீர்ப்பை தலைவணங்கி ஏற்கிறேன்: பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை பேட்டி

சென்னை, ஜூன் 6– மக்களின் தீர்ப்பை தலைவணங்கி ஏற்றுக் கொள்கிறேன் என்று பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

தி.நகரில் உள்ள கமலாலயத்தில் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

நாடாளுமன்ற தேர்தலில் மக்களின் தீர்ப்பை தலைவணங்கி ஏற்கிறோம். பா.ஜ.க.வும், கூட்டணி கட்சிகளும் பெற்றது நேர்மையான வாக்குகள். கோவையில் பா.ஜ.க. வரலாறு காணாத வாக்குகளைப் பெற்றுள்ளது. கோவையில் நான் பெற்ற 4.50 லட்சம் வாக்குகளும் பணம் கொடுக்காமல் நேர்மையாக கிடைத்த வாக்குகள். தமிழகத்தில் 40க்கு 40 தொகுதிகள் பெற்ற இந்தியா கூட்டணி சகோதரர்களுக்கு வாழ்த்துக்கள்.

ஒடிசாவில் தனிப் பெரும்பான்மையோடு பா.ஜ.க. ஆட்சியமைக்க உள்ளது. மத்திய அரசின் அனைத்து நலத்திட்டங்களும் மாநில அரசை வந்து சேர வேண்டும் என்பதே எங்கள் நோக்கம் என தெரிவித்தார். 2026 சட்டமன்ற தேர்தலில் அண்ணாமலைக்கு நல்ல எதிர்காலம் உள்ளது.


**PUBLIC NOTICE**

App.Advocate: S. A. ACHARYA

**BEFORE THE MOTOR ACCIDENT CLAIM TRIBUNAL (MAIN), BANASKANTHA DISTRICT, AT. PALANPUR**

M.A.C.M.A.NO.149/2021
Fix Date : 15/06/2024

Applicant : Legal heris of deceased Manubhai Somabhai Soni, Hansaben Manubhai Soni and Other
V/S
Opponent : 4. BABY LAKSHMI R., AT- NO. 60/01, V.V. KOIL STREET, CHENNAI-600002 (RTOREGISTERED OWNER OF TRAILOR NO- TN-06-00717
5. MRS. V. SUSHILA, AT-NO. 405, SOMU STREET, 4th, LANE PUDUMANAIKUPPAM, PYAPUARAM, CHENNAI, TAMILNUDA-600014 (INSURANCE POLICY HOLDER INSURED NAME OF TRAILOR NO-TN-06-00717

You Opponent is hereby informed by this public notice that :-

The afore-said petitioner has filed the above said petition against you and other opponents in this Tribunal to obtain Rs. 50,00,000/- (Rupees Fifth Lakh Only) under section166 of the M.V.Act of compensation.

You are Therefore, informed by this notice that in spite of repeated notices issued against you are not served. Therefore you are hereby directed that you should remain present before this Tribunal in person on the 15th day of Jun, 2024 at 10-30 A.M. to give reply of the said petition. Otherwise the said petition shall be heard and decided in your absence.

Give under my hand and seal of the Tribunal today this 23th day of May, 2024.

Prepaid By, (B.S.SHRIMALI) Assistant | Compered by (A.K. Modi) Superintendent | Court Seal | By order, (P.M. Prajapati) Registrar



**SAYAJI HOTELS LIMITED**

(CIN:L51100TN1982PLC124332)

**பதிவு அலுவலகம்: F1 C3, சிவவேல் அபார்ட்மெண்ட், 2 அழகப்பா நகர், ஜமீன் பல்லாவரம், கீழ்க்கட்டளை, காஞ்சிபுரம், தாம்பரம், சென்னை, தமிழ்நாடு – 600 117**

Phone No. 044-29871174 | Email: cs@sayajigroup.com | Website: www.sayajihotels.com

**41வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் மின்னணு வாக்குப் பதிவு தகவல்**

கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட மே 5, 2020 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண். 20/2020, ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 14/2020, 13 ஏப்ரல், 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.17/2020 மற்றும் ஜனவரி 13, 2021 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண் 02/2021 மற்றும் 25 செப்டம்பர், 2023 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.09/2023 மற்றும் செக்யூரிட்டீஸ் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (செபி) வெளியிட்ட 12 மே, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 மற்றும் 15 ஜனவரி, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 மற்றும் 7 அக்டோபர், 2023 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2023/167 மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) ஒழுங்குமுறைகள், 2015ன் (LODR கட்டுப்பாடுகள்) ஒழுங்குமுறை 44 ஆகியவற்றுக்கு இணங்க வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள வர்த்தகம் குறித்து பரிவர்த்தனையை மேற்கொள்ள சாயாஜி ஹோட்டல்ஸ் லிமிடெட்டின் (''கம்பெனி'') உறுப்பினர்களுக்கான **41வது வருடாந்திர பொதுக் கூட்டம் "AGM" வியாழக்கிழமை, 27 ஜூன், 2024 அன்று** காணொலி காட்சி ("VC")/பிற ஆடியோ காட்சிகள் ("OAVM") மூலம் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேலும், செக்யூரிட்டிஸ் அன்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியாவின் 13 மே 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62 மற்றும் 7 அக்டோபர் 2023 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2023/167 (''செபி சுற்றறிக்கைகள்'') ஆகியவை செக்யூரிட்டிஸ் அன்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள், 2015 (''கட்டியல் கட்டுப்பாடுகள்'') மற்றும் மேற்கூறிய எம்சிஏ சுற்றறிக்கை ஆகியவற்றுக்கு இணங்க வருடாந்திர அறிக்கை மற்றும் பதிலி பிடிவத்தின் காகித நகலை அனுப்புவது தொடர்பாக சில தளர்வுகளை அளித்துள்ளன. கூட்டம் நடைபெறும் இடம் கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: F1 C3, சிவவேல் அபார்ட்மெண்ட், 2 அழகப்பா நகர், ஜமீன் பல்லாவரம், கீழ்க்கட்டளை, காஞ்சிபுரம், தாம்பரம், சென்னை, தமிழ்நாடு 600 117 ஆகும்.

வைப்பு பங்கேற்பாளர், கம்பெனி/கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரிடம் ("RTA") மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் மேற்கண்ட அறிவிப்புடன் 2023-24ம் (F.Y.) நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை மின்னணு முறையில் (மின்னஞ்சல்) அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்புடன் 2023-24ம் நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை மற்றும் மின்னணு வாக்களிப்பு வழிகாட்டுதல்கள் கம்பெனியின் இணையதளம் www.sayajihotels.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளம் www.bseindia.com-ல் கிடைக்கும். வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பரிவர்த்தனை செய்யப்பட வேண்டிய அலுவலல்கள் தொடர்பான ஆவணங்களை https://www.cdslindia.com என்ற சிடிஎஸ்எல் இணையதளத்தில் மின்னணு வாக்களிப்பு முறை பகுதியில் பார்வையிடலாம்.

கம்பெனிகள் சட்டம், 2013-ன் பிரிவு 108-ன் விதிகளின்படி மற்றும் கம்பெனிகள் (நிர்வாகம் மற்றும் மேலாண்மை) விதிகள் 2014ன் விதி 20 மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) ஒழுங்குமுறைகள் 2015, ஒழுங்குமுறை 44ன் கீழ், வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் மீது பரிவர்த்தனை மேற்கொள்ள உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் வாக்களிக்கும் (''தொலைதூர மின்னணு வாக்களிப்பு'') வசதி மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதியை சிடிஎஸ்எல் மூலம் வழங்குவதில் கம்பெனி மகிழ்ச்சியடைகிறது. சிடிஎஸ்எல்-ன் மின்னணு வாக்களிப்பு முறையைப் பயன்படுத்தி வாக்களிக்கும் நடைமுறை அறிவிப்பில் "மின்னணு வாக்களிப்பதற்கான நடைமுறை மற்றும் வழிமுறைகள்" என்ற தலைப்பில் விவரிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களுக்கு தெரிவிப்பது யாதெனில்:

1. 41வது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கண்டுள்ள அலுவல்கள் மின்னணு வாக்களிப்பு முறையில் பரிவர்த்தனை மேற்கொள்ளப்படும்.
2. வியாழக்கிழமை, 20 ஜூன், 2024 (''கட் ஆப் தேதி'') அன்று கம்பெனியின் செலுத்தப்பட்ட சம பங்குகளை உறுப்பினர்கள் வைத்துள்ள விகிதத்தின் அடிப்படையில் வாக்களிக்கும் உரிமை இருக்கும்.
3. தொலைதூர மின்னணு வாக்களிப்பு 22 ஜூன், 2024 அன்று காலை 9.00 மணிக்கு (இந்திய நேரப்படி) துவங்கி 26 ஜூன், 2024 அன்று மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) நிறைவடையும். மேற்கண்ட தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் தொலைதூர மின்னணு வாக்களிப்பு அனுமதிக்கப்படமாட்டாது. தீர்மானத்தின் மீது ஒரு முறை வாக்களித்த உறுப்பினர், அதனைத் தொடர்ந்து மாற்றி வாக்களிக்க அனுமதிக்கப் படமாட்டார்.
4. கட் ஆப் தேதியன்று உறுப்பினர்கள் பதிவேடு அல்லது வைப்பாளர்கள்/ஆதிஇஎ ஆகியோரால் பராமரிக்கப்படும் பலன் பெறும் உரிமையாளர்கள் பதிவேட்டில் பெயர் இடம் பெற்றுள்ள நபர் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையில் வாக்களிக்கலாம்.
5. வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பை அனுப்பிய பின்னர் மற்றும் கட் ஆப் தேதிக்கு முன் கம்பெனியின் பங்குகளை வாங்கி உறுப்பினராகும் எந்தவொரு நபரும் வாக்களிப்பதற்காக யூசர் ஐடி மற்றும் பாஸ்வேர்டைப் பெறுவதற்கான நடைமுறைக்கு வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பைப் பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் ''VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் மற்றும் கூட்டத்தில் மின்னணு வாக்களிப்பு தொடர்பான பங்குதாரர்களுக்கான வழிமுறைகளின்'' கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் உறுப்பினர்கள் இதனை அணுகலாம்.
6. மின்னணு வழிமுறைகள் மூலம் வாக்களிப்பதற்கான வசதி வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வழங்கப்படும் என்பதை மேலும் உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளவும். VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்கள், தீர்மானங்கள் மீது தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையில் வாக்களிக்காமல் இருந்தால், அவர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதி உள்ளது. வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கு முன் தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையில் வாக்களிக்கும் உறுப்பினர்கள், VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்கலாம். ஆனால் மீண்டும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அறிவிப்பு சிடிஎஸ்எல் இணையதளமான (மின்னணு வாக்களிப்பு முகவர்) www.evotingindia.com-ல் கிடைக்கும். மின்னணு வாக்களிப்பு தொடர்பான கேள்விகள் அல்லது பிரச்சினைகளுக்கு, www.evotingindia.co.in'ல் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவை ("FAQs") பார்வையிடலாம் மற்றும் உதவி பிரிவின் கீழ் உள்ள மின்னணு வாக்களிப்பு கையேட்டை பார்வையிடலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதலாம் அல்லது திரு. அங்கூர் பிண்டல், கம்பெனி செயலாளர் மற்றும் ஒப்புதல் அதிகாரி, சாயாஜி ஹோட்டல்ஸ் லிமிடெட், cs@sayajigroup.com என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

உறுப்பினர்கள் வாக்களிக்கும் வசதியுடன் கேள்விகள் / குறைகளை நிவர்த்தி செய்ய பின்வரும் விவரங்களில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:

திரு. ராகேஷ் தால்வி, மேலாளர், (CDSL) சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், ஏ விங், 25வது தளம், மாரத்தன் பியூச்சரெக்ஸ், மபத்லால் மில் காம்பவுண்ட்ஸ், என் எம் ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை 400 013 தொடர்பு கொள்ளலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.comக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது 1800 22 55 33 என்ற கட்டணமில்லா எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**மின்னஞ்சல் முகவரியை பதிவு/புதுப்பிக்கும் முறை**

1. **காகித வடிவில் பங்குகளை வைத்துள்ளவர்கள் :** போலியோ எண்., பங்குதாரரின் பெயர், ஸ்கேன் செய்யப்பட்ட பங்கு சான்றிதழ் (முன் மற்றும் பின்புறம்), பான் (சுய சான்றொப்பமிடப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட பான் கார்டு), ஆதார் (சுய சான்றொப்பமிடப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட ஆதார் கார்டு) ஆகிய விவரங்களுடன் கம்பெனி/ஆர்டிஇ மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்ப வேண்டும்.
2. **மின்னணு வடிவில் பங்குகளை வைத்துள்ளவர்கள் :** முறையே உங்களின் வைப்புத் தொகை பங்கேற்பாளரிடம் (DP) உங்களின் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்ணை தயவு செய்து புதுப்பிக்கவும்
3. **மின்னணு வடிவில் பங்குகளை வைத்துள்ள தனிநபர்கள்:** முறையே உங்களின் வைப்புத் தொகை பங்கேற்பாளரிடம் (DP) உங்களின் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்ணை தயவு செய்து புதுப்பிக்கவும். ஏனெனில், வைப்பாளர் மூலம் மின்னணு வாக்குப்பதிவு மற்றும் மெய்நிகர் கூட்டத்தில் பங்கேற்கும்போது இது கட்டாயம் ஆகும்.

குழு உத்தரவுப்படி
**சாயாஜி ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக**
ஒப்பம்/–
**அங்கூர் பிண்டல்**
கம்பெனி செயலாளர் மற்றும் ஒப்புதல் அதிகாரி

தேதி: 06.06.2024
இடம்: சென்னை



**ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை**

**கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 27BKC, C-27, G - பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை - 400 051
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006.
லேண்ட் மார்க்: சிட்ரான் கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அருகில்

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல்மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)-ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு.** பிள்ளி ஹறஷிங் பைனான்ஸ் லிமிடெட் (இனி "பிள்ளிசிச்எப்எல்" என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 18.11.2019 அன்று பிள்ளி ஹறஷிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (இனி "பிள்ளிசிச்எப்எல்" என்று குறிப்பிடப்படும்) அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) கவரதீனம் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண்.HOU/CHE/0717/408845ன் கீழ்: கீழே உள்ள விவரங்களின்படி **திரு. பே. புஷ்பராஜ் மற்றும் திருமதி. ஜெயந்தி